# திருக்குறள்

**9. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு.**

பொருள் :

எந்த தருமத்தை அழித்தவருக்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டு. ஒருவர் செய்த உதவியை மறந்தவருக்கு விமோசனமே கிடையாது.

**10. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது.**

பொருள் :

தக்க சமயத்தில் ஒருவர் செய்யும் உதவி சிறியதாக இருந்தாலும், அது அந்த உலகத்தை விடப் பெரியதாகும்.

**11. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு.**

பொருள் :

நெருப்பினால் ஏற்பட்ட காயம் ஆறிவிடும். நாவினால் சுடுசொல் கூறினால் அந்தக் காயம் தழும்பாகி நெஞ்சில் மறையாதிருக்கும்.

**12. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.**

பொருள் :

ஒழுக்கம் எல்லோருக்கும் புகழைத் தருமாதலால் அந்த ஒழுக்கத்தை உயிரினும் மேலானதாக நினைக்க வேண்டும்.

www.kids.noolagam.com